செ.வெ.எண் : 932/2017 நாள் : 07.12.2017

**கன்னியாகுமரி மாவட்டம்**

**புயலால் சேதமடைந்துள்ள வீடுகளுக்கு முழுமையாக உதவித்தொகை பட்டுவாடா வருவாய்த்துறை அரசு செயலாளர் டாக்டர்.பி.சந்திரமோகன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

வருவாய்த்துறையின் மூலம் நடைபெற்று வரும் நிவாரணப பணிகளை ஒருங்கிணைத்து துரிதப்படுத்தி வரும் வருவாய்த்துறை செயலாளர் டாக்டர். திரு. பி.சந்திரமோகன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

கன்னியாகுமரி மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்டு சேதமடைந்துள்ள வீடுகள் குறித்த விபரங்கள் சேகரிக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. தற்போதுள்ள கணக்கீடுகளின்படி முற்றிலுமாக சேதமடைந்துள்ளதாக கணக்கிடப்பட்ட 1035 வீடுகளில் 993 வீடுகளுக்கு ரூ.49,65,000/- மதிப்பிலும், பகுதியாக சேதமடைந்துள்ளதாக கணக்கிடப்பட்ட3,219 வீடுகளில் 3,219 வீடுகளுக்கு ரூ.1,31,97,900/- மதிப்பிலும் என மொத்தம் இதுவரை சேதமடைந்துள்ளதாக கணக்கிடப்பட்ட 4266 வீடுகளில் 4,222 வீடுகளின் உரிமைதாரர்களுக்கு ரூ.2,21,62,900/- நிவாரணத்தொகை அந்தந்த உரிமையாளர்களின் வங்கி கணக்குகளில் (இ.சி.எஸ் மூலம்) நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நபர்களுக்கு அவரவர் வங்கி கணக்குகளில் கால தாமதமின்றி இரண்டு நாட்களுக்குள் நிவாரணத்தொகை வரவு வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ள்ளது.

அதேபோல், வருவாய் கிராமங்களில் சேதமடைந்த பயிர்களான நெற்பயிர், தென்னை, வாழை, மரவள்ளிக்கிழங்கு, ரப்பர், கிராம்பு, நல்லமிளகு, பாக்குமரம் ஆகியவற்றை கணக்கெடுக்கும் பணியானது வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறையினைச் சார்ந்த அலுவலர்களை ஒருங்கிணைத்து கொண்டு வட்டார அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டு, கணக்கெடுப்பு பணிகள் இன்றிலிருந்து முழுவீச்சில் நடைபெறும். இது குறித்த சேத விபரங்கள் தினமும் மேற்படி குழுக்களிடமிருந்து பெறப்பட்டு நிவாரணம் வழங்கிட நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், ஓகி புயலின் எதிரொலியாக மாவட்டத்தில் மரணமடைந்தவர்களில், அகஸ்தீஸ்வரம் வட்டம், இராஜாக்கமங்கலத்தை சாாந்த ராஜேந்திரன், த/பெ. மகாலிங்கம், வடசேரியை சார்ந்த தியாகராஜன், த/பெ. கணேசன், விளவங்கோடு வட்டம், சிவசெல்வபுரம் பகுதியை சார்ந்த குமரேசன் த/பெ நாகமணி, கேசவன் புதூரை சார்ந்த செல்வராமன் த/பெ.அய்யாவு நாடார், வன்னியூர், மலையடியை சார்ந்த அலெக்சாண்டர், த/பெ. ஜான்ரோஸ், இனையம்புத்தன்துறையை சார்ந்த சூசைய்யா, த/பெ. சூசைஅடிமை, ராமன்துறையை சார்ந்த ஜெர்மான்ஸ், த/பெ. சூசை, குழித்தட்டுவிளையை சார்ந்த ரெத்தினசாமி, த/பெ. ராமசந்திரன், கல்குளம் வட்டம், மண்டைக்காடை சார்ந்த சரஸ்வதி, மாத்தூர், குமரன்குடி கிராமத்தை சார்ந்த அன்னம்மாள், க/பெ. முத்துமணி ஆகிய 10 நபர்களின் குடும்பத்தினர்களுக்கு தலா ரூ. 4 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.40 இலட்சம் நிவாரண உதவித்தொகை அவர்களது வங்கி கணக்கில் (இசிஎஸ் முறையில்) வழங்கப்பட்டுள்ளது.

மேலும், போர்க்கால அடிப்படையில், பயிர்சேதம் கணக்கெடுக்கும் பணி மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவித்தொகை வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என வருவாய்த்துறை அரசு செயலாளர் டாக்டர்.பி.சந்திரமோகன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**